**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. எம். ராமதாஸ், எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ம் நாள் புதன்கிழமை

**நிறைவேற்றுதல் மனு எண்.50/2020 இன்**

**அசல் வழக்கு எண்.206/2015**

**(வள்ளியூர் சார்பு நீதிமன்ற நிறைவேற்றுதல் மனு எண்.41/2019)**

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,**
**களக்காடு கிளை,**
**திருநெல்வேலி மாவட்டம்**
**அதன் கிளை மேலாளர் மூலமாக** .... மனுதாரர்/வாதி

// எதிர் //

C. உதயபாரதி .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது முதலில் வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் நி.ம.எண்.41/2019 என தாக்கல் செய்யப்பட்டு, அதன் பின்னர், மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் உத்தரவின் படி, இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் நி.ம.எண்.50/2020 என எண்ணிடப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த மனுவானது, என் முன்பு இறுதியாக 20.01.2026 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. சங்கரநாராயணன் அவர்கள் முன்னிலையாகியும்,



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.21 18:32:33 +0530

எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ப. ஆனந்தராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

இம்மனுவில் கண்ட தொகையை மனுதாரருக்கு எதிர்மனுதாரரிடமிருந்து வசூலாகும் பொருட்டு எதிர்மனுதாரருக்கு உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி அறிவிப்பு அனுப்பி செலுத்த தவறும் பட்சத்தில் வாரண்டில் சிவில் ஜெயிலில் பிடித்து வைக்க உத்தரவிட வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனு சுருக்கம் :-**

மனுதாரருக்கு ஆதரவாக அசல் வழக்கு எண்.206/2015 ல் 26.10.2016 ம் தேதியிட்ட தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அதை நிறைவேற்ற இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரரின் நிறைவேற்றுதல் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் கோரும் பரிகாரங்கள் எதுவும் அவருக்கு கிடைக்கக் கூடியதல்ல என்றும், மனு 8 வது காலத்தில் மனுதாரர் கூறியுள்ள 12.50% வட்டி என்பது கூடுதலாக கூறப்பட்டுள்ளது என்றும், வங்கி கடன் பணத்திற்கு அவ்வளவு கூடுதல் வட்டி போட்டிருப்பது சட்டப்படி குற்றமாகும் என்றும், உண்மையில் மனுதாரர் வங்கியில் இந்த எதிர்மனுதாரர் ரூ.4,50,000/- கடன் பெற்று



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.21 18:32:41 +0530

அதில் ரூ.3,30,000/- ஏற்கனவே செலுத்திய பின்னர் இந்த நிறைவேற்றுதல் மனு அவசியமற்ற ஒன்றாகும் என்றும், மேலும் இந்த எதிர்மனுதாரர் சட்டப்படி வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தவும் தயாராகத்தான் இருந்தார் என்றும், ஆனால் வறட்சியின் காரணமாக விவசாயம் நசுங்கி போன நிலையில், வாழ்க்கை நடத்தவே கஷ்டமாக இருந்ததால்தான் தொகையை செலுத்த முடியாமல் கஷ்டப்பட்டு வந்தார் என்றும், மனு பத்தி 9 ல் கூறியுள்ள செலவுத்தொகை விபரம் தவறு என்றும், வேண்டுமென்றே கூடுதலான செலவுத் தொகை கொண்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரரின் இந்த நிறைவேற்றுதல் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4) <u>தீர்வுக்குரிய பிரச்சனை</u> :-**

இம்மனுவில் கண்ட தொகையை மனுதாரருக்கு எதிர்மனுதாரரிடமிருந்து வசூலாகும் பொருட்டு எதிர்மனுதாரருக்கு உரிமையியல் விசாரணை சட்டத்தின் படி அறிவிப்பு அனுப்பி செலுத்த தவறும் பட்சத்தில் வாரண்டில் சிவில் ஜெயிலில் பிடித்து வைக்க உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5)** இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்து, அவர் ரூ.3,30,000/- திருப்பி செலுத்தியுள்ளதாகவும், மேலும் இந்த எதிர்மனுதாரர் சட்டப்படி வங்கிக்கு செலுத்த



RAMADHAS
Digitally signed by RAMADHAS
Date: 2026.01.21 18:32:47 +0530

வேண்டிய தொகையை செலுத்தவும் தயாராகத்தான் இருந்ததாகவும், ஆனால் வறட்சியின் காரணமாக விவசாயம் நசுங்கி போன நிலையில், வாழ்க்கை நடத்தவே கஷ்டமாக இருந்ததால்தான் தொகையை செலுத்த முடியாமல் கஷ்டப்பட்டு வந்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்படும் போது, எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கண்டவாறு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. எனினும், எதிர்மனுதாரர், மனுதாரர் வங்கிக்கு தொகை செலுத்தப்பட்டதாக எந்த ரசீதும் அவரது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. மேலும், அவரது தரப்பில் சாட்சியம் அளிக்க போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும், அவர் தரப்பில் சாட்சியங்களோ, ஆவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேற்கண்ட அசல் வழக்கு எண்.206/2015 ல் 26.10.2016 ல் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணையை நிறைவேற்ற இம்மனு தாக்கல் செய்திருக்கும் நிலையில், மேற்கண்ட தீர்ப்பாணையில், வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதி வங்கிக்கு, பிரதிவாதி ரூ.3,66,220/- செலுத்த வேண்டும் என்றும், மேற்படி தொகைக்கு பிராது தாக்கல் செய்த தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை ஆண்டுக்கு 12.50% வட்டியுடன் சேர்த்து 3 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகைக்குதான் இந்த நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்துள்ளதாக உள்ளது. மேற்கண்ட தீர்ப்பாணைக்கு எதிராக பிரதிவாதி, மேல்முறையீடோ அல்லது சீராய்வு மனுவோ தாக்கல் செய்யவில்லை என்பது தெரிகிறது. மேற்கண்ட 26.10.2016 ம் தேதியிட்ட தீர்ப்பாணை இந்த எதிர்மனுதாரரை கட்டுப்படுத்துவதாகவே உள்ளது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.21 18:32:53 +0530

**6)** இம்மனுவானது உரிமையியல் விசாரணை சட்டம் கட்டளை 21 விதி 37 மற்றும் 38 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கண்ட தொகையை செலுத்த போதுமான வருமானம் உள்ளதா? என்பதையும், மேற்கண்ட தொகையை வேண்டுமென்றே எதிர்மனுதாரர் செலுத்தாமல் இருக்கிறாரா? என்பதையும் அறியும் பொருட்டு 'means enquiry' செய்யப்பட்டது.

**7)** மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். அதில் எதிர்மனுதாரருக்கு மனுவில் கண்ட தொகையை செலுத்துவதற்கு போதிய வருமானம் இருந்தும் வேண்டுமென்றே செலுத்தாமல் இருந்து வருகிறார் என சாட்சியம் அளித்துள்ளது தெரிய வருகிறது. மேற்கண்ட மனுதாரரின் சாட்சியம் நம்பும்படியாகத்தான் உள்ளது.

**8)** மேற்கண்டவற்றிலிருந்து, எதிர்மனுதாரர் போதிய வசதி இருந்தும் வேண்டுமென்றே தீர்ப்பாணை தொகையை செலுத்தாமல் இருந்து வருகிறார் என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மேற்கண்ட தீர்ப்பாணை தொகையினை வசூலிக்கும் பொருட்டு எதிர்மனுதாரரை அரெஸ்ட் செய்து சிவில் ஜெயிலில் அடைக்க ஏதுவாக இம்மனு அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது

**9)** முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.21 18:33:00 +0530

இன்று 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.21 18:33:06 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

**மனுதாரர் தரப்பு சாட்சி :**

ம.சா.1 - சாரு

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.21 18:33:13 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம்

நாங்குநேரி

நிறைவேற்றுதல் மனு எண்.50/2020

நேரிய/வரைவு உத்தரவு

நாள் - 21.01.2026